நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று (17.05.2023) வேலூர் மாவட்டம், காட்பாடி ரங்காலயா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி சாதனை மலரை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன்,சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், திருமதி.அமலு விஜயன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, துணை மேயர் சுனில் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னையில் 108.82 டிகிரி வெய்யில்!

சென்னை,மே.18

தமிழ்நாட்டில் நேற்று 15 இடங்களில் 100 டிகிரி ஃபாரன் ஹீட்டுக்கு மேல் வெயில் சுட்டெரித்தது. சென்னையில் 2-வது நாளாக நேற்று 108.82 டிகிரி வெய்யில் பதிவானது.

வங்கக் கடலில் உருவான புயல் தற்போது மியான்மரில் கரையைக் கடந்தது. புயல் கரையைக் கடக்கும் போது வங்கக் கடல் பகுதியில் இருந்து ஈரப்பதத்தை அதிகமாக உறிஞ்சியதால், இந்தியாவின் தரைப் பகுதியில் காற்றில் ஈரப்பதம் குறைத்து வெப்பம் அதிகரிக்கத் தொடங்கியது.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வசித்துவரும் மாணவி ஜனனி பிளஸ்டு தேர்வில் மாவட்ட அளவில் 592மதிப் பெண்கள் எடுத்து முதலிடம் பெற்றதை பாராட்டி கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் நிதிஉதவி வழங்கினார்.உடன் மானாமதுரை நகர்கழக செயலாளர் க.பொன்னுச்சாமி கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை. ராசாமணி,ஒன்றியக் குழுத்தலைவர் திருமதிலதாஅண்ணாதுரை, அவைத்தலைவர் ரவிச்சந்திரன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

கள்ளச்சாராயத்தை ஒழிக்க குழுவை ஏற்பாடு செய்யலாம்!

முதலமைச்சரின் விரைவான நடவடிக்கை பாராட்டத்தக்கது!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே.18-

'கள்ளச்சாராயத்தை ஒழிக்க குழுவை ஏற்பாடு செய்யலாம்' என்றும் 'முதலமைச்சரின் விரைவான நடவடிக்கை பாராட்டத்தக்கது' என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம், சித்தாமூர் போன்ற சில ஊர்களில் விஷச் சாராயமோ, கள்ளச் சாராயமோ குடித்து அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி செய்தும், சம்பந்தப்பட்ட மாவட்ட அமைச்சர்களையும் உடன் அழைத்துக்கொண்டு இறந்தவர்களின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல், இரங்கல் கூறியுள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டா லின். உடனடியாக விரைந்து அதிகாரிகளையும் அழைத்து, மெத்தனமாகச் செயல்பட்ட காவல் துறை அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்து, அவர்களை பணியிடை நீக்கம் செய்து, சி.பி.சி.அய்.டி. விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளார் நமது முதலமைச்சர் அவர்கள்.

இதை ஓர் "அரசியல் மூலதனமாக்கி" எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, மாநில பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையும், அவரது கட்சியினரும் இதற்காகக் கதறிக் கண்ணீர் வடித்து, முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று 'கோரசும்' பாடுகிறார்கள். இவர்கள் யாருக்காக கண்ணீர் வடிக்கிறார்கள்?

மறைந்த உயிர்களுக்காக, மனிதர்களுக்காக அவரது குடும்பத்தினருக்காக ஆழ்ந்த இரங்கல் தெரிவித்ததோடு, ஏழைக் குடும்பங்கள் நிராதரவுடன் தெருவில் நிற்கும் அவல நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்ற கருணை உள்ளத்தோடு நிதி உதவியும் (10 லட்சம் ரூபாய்) செய்துள்ளார்.

இத்தகைய மரணம் அடைந்தவர்களுக்கு அரசு நிதி உதவி ஏன்? என்று சட்டப்படி சிலர் கேள்வி கேட்டாலும்கூட, இதில் மனிதநேயத்தையும், அந்த 'ஓடப்பர்' களான ஏழையப்பர்கள் குடும்பப் பாதுகாப்பு அம்சத்தையுமே முதன்மையாகக் கவனிக்கவேண்டும்.

முதலமைச்சரை ராஜினாமா செய்யச் சொல்லும் அற வழிப்பட்ட உரிமை (தார்மீக) இவர்கள் எவருக்காவது உண்டா, நியாயப்படி?

நாட்டு நடப்பில் கள்ளச்சாராயம் அல்லது விஷச் சாராயம் குடித்துச் சாவது இந்த ஆட்சியில் மட்டும்தான் நடந்திருக்கிறதா?

(நாம் மரணமடைந்த உயிர்களைக் குறைத்து மதிப்பிடவில்லை மனிதநேயத்தோடு மிகவும் துயரமும், துன்பமும் அடைகிறோம் என்பது ஒருபுறமிருந்தாலும்).

இதை வைத்து "அரசியல் செய்ய முனையும் அரசியல் கபட வேடதாரிகளை நோக்கிக் கேட்கும் கேள்விகளுக்கு, அவர்கள் மனச்சாட்சியோடு பதிலளிக்க முன்வருவார்களா?

முன்பு ஜெயலலிதா அம்மையார் ஆட்சி செய்த காலத்தில், 2001 ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம் பண்ருட்டி யில் கள்ளச்சாராயத்திற்கு 52 பேர் பலியாகியதோடு, 200க்கும் மேற்பட்டோர் வாழ்க்கையோடு போராடிய பிறகு, சாவு எண்ணிக்கையும் கூடியதே, அப்போது அவர் அதற்காக முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தாரா? 30 பேருக்குமேல் கண் பார்வை பறிகொடுத்த பரிதாபமும் நிகழ்ந்ததே! (2001).

அதே ஆண்டில் காஞ்சிபுரம் அருகேயும், ரெட்ஹில்ஸ் அருகே கோட்டூர் கிராமத்திலும் கள்ளச் சாராய சாவுகள் 30 பேருக்குமேல் நிகழ்ந்த போதும், எத்தனை முறை முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்?

பா.ஜ.க. காவிகளும், இந்த 'கான கோஷ்டி'யில் இணைந்துள்ளார்களே அவர்களது குஜராத் ஆட்சியிலும், (உ.பி.யில் அண்மையில்) 40 பேர் உயிர் பலிக்கு ஆளானபோது, குஜராத் முதலமைச்சர் ராஜினாமா செய்தாரா?

பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோரின் சொந்த மாநிலம்; 'குஜராத் மாடல்'பற்றி உரக்க முழங்கிய மாநிலம்!

அப்போது திறக்காத இவர்களது வாய்கள், இப்போது மட்டும் ஏன் அகலமாகத் திறக்கின்றன என்பது புரியவில்லையா?

இந்த 'அரசியல் கிளிசரின்' அழுகையாளர்கள் மனிதநேயத்தால் அழுவதுபோன்ற நடிப்புச் சுதேசிகளாகி உள்ளனர்!

தமிழ் மக்களுக்கு நன்கு இது புரியும்!

நாம் அரசியலுக்கு அப்பாற்பட்டு மனிதநேயத்தோடு இப்பிரச்சினையை அணுகி அலசிப் பார்த்தால், மதுவிலக்கு அமலில் இல்லாத நிலையில், டாஸ்மாக்குகள் உள்ள நிலையில், நமது "குடி"மக்கள் இப்படி மலிவாக உயிரைப் பலியிடுகின்றார்களே இது நியாயமா? காவல்துறையில் கருப்பு ஆடுகளின் "மாமூல்" ராஜ்ஜியம் சிறகை விரிக்கிறதே என்று இதை (டாஸ்மாக்கை) ஒழித்தால், விளைவு எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்க்கவே அதிர்ச்சியாக உள்ளது!

கிராம அதிகாரிகள், ஊராட்சி, பேரூராட்சித் தலைவர்கள் அத்துணைப் பேரின் கூட்டுப் பொறுப்பில் இப்பிரச்சினையை விட்டு, காவல்துறையின் ஒருங்கிணைப்போடு "ஒரு புதிய திட்டம்" வகுக்கப்பட வேண்டும். மது விலக்கு விஷச் சாராயம், கள்ளச்சாராய ஒழிப்பையும் ஒரு மக்கள் இயக்கமாக (மதுவிலக்குப் பிரச்சாரமும் இன்னொரு பக்கம் தேவை) கட்சிக் கண்ணோட்டமின்றி குழுக்கள் அமைத்து, ஊரில் செல்வாக்குள்ளவர்களை இதற்குப் பொறுப்பாக்கி, ஆண்டுதோறும் இது போன்ற குற்றமற்ற கிராமங்களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தையும் தமிழ்நாடு அரசும், முதலமைச்சரும் யோசிக்கவேண்டும்.

ஒரு புது அணுகுமுறை இதற்கு உடனடியாகத் தேவை!

தொலைநோக்குத் திட்டமாக அது அமையட்டும்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கள்ளச்சாராய உயிர்ப் பலிகள் இனி நிகழவே கூடாது!

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கை

சென்னை, மே 18-

தமிழ்நாட்டில் கள்ளச் சாராயத்தால் உயிர் இழந்தவர்கள் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்திருப்பது அதிர்ச்சி தருகிறது.

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அடுத்து எக்கியார் குப்பத்தில் கடந்த 13ஆம் தேதி கள்ளச்சாராயம் குடித்த 50க்கும் மேற்பட்டோர் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 14 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

இதேபோல செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அடுத்த பெருங்கரணை, பேரம்பாக்கம் கிராமத்தில் கள்ளச் சாராயம் குடித்த எட்டு பேர் உயிரிழந்தனர். முழு மது விலக்கு வேண்டும் என்று நாம் கோரி வரும் நிலையில், இன்னொரு பக்கத்தில் இது போன்ற கள்ளச்சாரய விற்பனை அமோகமாக நடப்பதும், அதனால் உயிர் பலிகள் ஆவதும் மிகுந்த வேதனை அளிக்கிறது.

அரசு விற்பனை செய்யும் மதுவைப் போன்றே கள்ளச் சாராயப் புட்டிகள் புழக்கத்தில் இருப்பதும், அதனைக் கண்டறிந்து தடுக்க வேண்டிய காவல்துறையினரின் அலட்சியத்தாலும் இது போன்ற உயிர் இழப்புகள் நேர்கின்றன. கள்ளச்சாராயம் விற்பனை செய்வோரை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். அதனை தடுக்கத் தவறிய காவல்துறையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

கள்ளச்சாராயம் அருந்தி, மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருவோரை முதலமைச்சர் அவர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, தக்க சிகிச்சை மேற்கொள்ள ஆணையிட்டு உள்ளது ஆறுதல் தருகிறது. இனி இது போன்ற துயர நிகழ்வுகளுக்கு இடம் இல்லாத நிலையை அரசு உருவாக்க வேண்டும்.

அரசு மதுபான விற்பனைக் கடைகளை படிப்படியாகக் குறைத்து, முழு மது விலக்கை செயல்படுத்த வேண்டும் என்பதுதான் மதிமுக தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையாகும்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் அரளிக்கோட்டையில்

சிலம்பு பயிற்சி முதல் ஆண்டு நிறைவு விழா!

கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பங்கேற்பு!

சிவகங்கை. மே. 18.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி அரளிக்கோட்டையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் தந்தை கருத்தான், தாயார் கருப்பாயி அம்மாள் பெயரில் கருத்தான் கருப்பாயி தொண்டு நிறுவன அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது.

இந்த அறக்கட்டளை சார்பில் இலவச சிலம்பம் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. இந்த அறக்கட்டளை சார்பில் அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் பிளஸ்டு, எஸ்.எஸ்.எல்.சி. மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகைஉட்பட பல்வேறு உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.இந்த சிலம்பு பயிற்சி பள்ளியில் 23 கிராமங்களைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இந்த சிலம்பு பயிற்சி பள்ளியின் முதலாவது ஆண்டு நிறைவு விழா கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது. தொண்டு அறக்கட்டளை நிறுவனர் மருத்துவர் கோகுலகிருஷ்ணன் வரவேற்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகள் சிலம்பு பயிற்சி, மான் கொம்பு சண்டை, தீப்பந்தம் ஏற்றி சுற்றுதல் உட்பட பல்வேறு விளையாட்டு வீரசாகச நிகழ்ச்சிகளை நடத்தி காட்டினார்கள். மேலும் இப் பயிற்சி பள்ளி மாணவ,மாணவிகள் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்று கோப்பைகளும், சான்றிதழும், பெற்றுள்ளார்கள். இப்பள்ளி மாணவிகளின் திறமையைப் பாராட்டும் வகையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தனது சொந்த நிதியில் இருந்து ரூபாய் 10,000 மற்றும் ரூபாய் 5000 வழங்கி பாராட்டி சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர் கே.எஸ்.எம். மணிமுத்து, சிலம்ப பயிற்சி ஆசிரியர் முத்துகிருஷ்ணன், ஆசிரியை ஹேமா, ஒருங்கிணைப்பாளர் பாலா, பொதுக்குழு உறுப்பினர் பி.ஆர்.பெருமாள், மாரிமுத்து, பெரியசாமி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் பில்லப்பன், அழகுராஜா, வெங்கடேசன், சுப்பிரமணியன், புவனேஸ்வரி காளிதாஸ், ஊராட்சி மன்ற தலைவர் தமிழரசன், ராஜ்மோகன், ஞானசேகரன், அரவிந்த், பெரியசாமி, மதியழகன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சதீஷ்குமார் கண்ணன், ராதா சதீஷ்குமார், முத்துகிருஷ்ணன், பிரபாகரன் காளிதாஸ் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத் தலைவர் த.அமிர்தகுமார் அறிக்கை!

சென்னை, மே.18-

அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநில தலைவர் த.அமிர்தகுமார் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத்தலைவர் த.அமிர்தகுமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படியை 38 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக (4 சதவீதம்) ஏப்ரல் 1ம் தேதியிலிருந்து உயர்த்தி வழங்க உத்தரவிட்டமைக்கு நூற்றாண்டு கால பாரம்பரியமிக்க தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது. மத்திய அரசு அறிவிக்கும் அதே நாளிலிருந்து மாநில அரசும் அகவிலைப்படி உயர்வினை வழங்க வேண்டும் என கோரிக்கையை வைத்து தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தோம். ஒவ்வொரு அகவிலைப்படி உயர்வின் போதும் நிலுவையின்றி அரசு வழங்கும் என எதிர்பார்த்தோம். இம்முறை அரசு இதை நிறைவேற்றியிருப்பது மகிழ்ச்சியை தருகிறது. ஆறு மாத நிலுவையை மூன்று மாதமாக குறைத்து அறிவித்துள்ளதை, ஜனவரி முதல் தேதியிலிருந்து அமலுக்கு வரும் என அறிவித்து இருந்தால் இன்னும் கூடுதலாக மகிழ்ந்து இருப்போம்.

இந்த அகவிலைப்படி உயர்வு அறிவிப்பு 16 லட்சம் அரசு அலுவலர்கள் ஆசிரியர்களுக்கு பயனளிக்கும் அறிவிப்பு. தமிழக அரசின் திட்டங்களை கடைக் கோடி மக்களை சென்றடைய பாடுபடும் இவ்வலுவலர்கள் இந்த அறிவிப்பிற்கு பிறகு இன்னும் கூடுதல் மகிழ்ச்சியுடன் பணிபுரிவார்கள். மேலும் இம்முறை அரசின் அறிவிப்பில் மத்திய அரசு அறிவிக்கும் அதே நாளிலிருந்து அகவிலைப்படி உயர்வை மாநில அரசும் இதன்பிறகு வழங்கும் என்பதையும் மகிழ்வுடன் வரவேற்கின்றோம். இதைப் போன்ற அறிவிப்புகள் மூலம் அரசு அலுவலர்கள் ஆசிரியர்களுக்கு இணக்கமான நல்லுறவு அரசோடு ஏற்படும் என்பதால் மனமார்ந்த நன்றியை முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

அகவிலைப்படி உயர்வை அறிவித்து எங்களை மகிழ்வித்தது போல நிலுவையிலுள்ள சரணீர்விடுப்பு சலுகை, பங்களிப்பு ஓய்வுதியத்திட்டத்தினை இரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதியத்திட்டத்தினை அமுல்படுத்துதல், காலிப்பணியிடங்களை நிரப்புதல் போன்ற நிலுவை கோரிக்கைகளையும் ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிப்பார் என உறுதியாக நம்புகிறோம்.

இவ்வாறு த.அமிர்தகுமார் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

தி.மு.க. இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டம்!

வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

கழக இலக்கிய அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம், நாளை (19.05.2023 வெள்ளிக்கிழமை) காலை 10 மணியளவில் இலக்கிய அணித் தலைவர் புலவர் இந்திர குமாரி தலைமையில் கலைஞர் அரங்கம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. இதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடத்துவது தொடர்பாகவும், இலக்கிய அணி சிறப்பாக செயல்படுவது தொடர்பாக ஆலோசனையும் நடைபெற உள்ளது. ஆகையால் மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

வி.பி.கலைராஜன்
செயலாளர் - தி.மு.க. இலக்கிய அணி

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 66 லட்சம் மதிப்பில் எஸ்.ஏ. காலனி, 8வது தெரு, சர்மா நகர், வியாசர்பாடி மற்றும் 1வது தெரு, இந்திரா காந்தி நகர், வியாசர்பாடியில் புதிய இரண்டு அங்கன்வாடி கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்த திறப்பு விழா நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் தா. இளைய அருணா எம்.சி. பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன், பகுதிச் செயலாளர் ஜெயராமன், வட்ட செயலாளர் மலைச்சாமி எம்.சி. மற்றும் மற்றும் அனைத்து கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.

தி.மு.க. சட்டத்துறை சார்பில்

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தேர்வுக்கான நேர்காணல்!

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அறிக்கை!

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, தி.மு.க. சட்டத்துறை மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தேர்வுக்கான பின்வரும் தேதியில் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான நேர்காணல் நடைபெறும்.

நேர்காணல் நடைபெறும் நாள் : 20-5-2023 (சனிக்கிழமை)

இடம்: "அன்பகம்", சென்னை - 18

மாவட்டங்கள்	நேரம்
காலை 9.00 மணி	வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை
மாலை 4.00 மணி	திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு

இதில், ஏற்கனவே தி.மு.க. சட்டத்துறை சார்பில் வெளியிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து, தலைமைக் கழகத்திலோ அல்லது மாவட்டக் கழக அலுவலகத்திலோ சமர்ப்பித்தவர்கள் மட்டுமே இந்நேர்காணலில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.5.2023

என்.ஆர்.இளங்கோ, எம்.பி.
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முல்லை வடிவேல்
மே 18 (1999)

கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து உறுப்பினர். செயற்குழு - பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பு வகித்தவர். ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து பதினாறு ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.

வேலூர் கூட்டுறவு வங்கியின் தலைவராகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, கருப்புக் கொடி, விலைவாசி உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.